கள்ளக்குறிச்சியில் பேருந்து பணிமனை

¼ வினா எண். 211—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கள்ளக்குறிச்சியில் அரசு போக்குவரத்துப் பணிமனை ஒன்று ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பணிமனை ஒன்றைத் துவக்க இடம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நிலத்தைக் கையகப்படுத்திய பின்பு, கட்டுமான வேலை துவக்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தையும் வடாற்காடு மாவட்டத்தையும் இணைத்துப் பெரியார் போக்குவரத்துக் கழகம் இயங்கி வருகிறது. இரண்டு மாவட்டங்களுக்கும் மையமாக கள்ளக்குறிச்சி இருக்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பே நிலத்தைக் கையகப்படுத்த அரசு முன் வந்திருந்தும் இதுவரையில் அதற்கான எந்தவிதமான முயற்சியும் இல்லாமல் இருக்கிறது. உடனடியாக அந்த இடத்தைக் கையகப்படுத்தி பணிமனையை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-40]

* மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியில் ரூ. 14,000 செலவில் நிலத்தை வாங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நிலம் வாங்கப்பட்டவுடன் பணிமனை கட்டப்படுகின்ற நிலை ஏற்படும்.

பூம்புகாரில் தொழிற்பேட்டை

வினா எண். 212—திரு. எஸ். கணேசன், திரு. என். கிட்டப்பா மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பூம்புகாரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் யோசனை உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பூம்புகார் பகுதியில் தொழிற் பேட்டை அமைக்கக்கோரி தொழில் முனைவோர்களிடமிருந்து போதிய அளவில் கோரிக்கைகள் வரப்பெற்றால், அங்கு தொழிற்பேட்டை அமைப்பது அல்லது சிறுதொழில் கூடங்கள் கட்டுவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

1979 மார்ச் 3]

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் பூம்புகார், திருவாரூர், மற்றும் ஒரு இடம் ஆக 3 இடங்களைத் தேர்ந்தெடுத்து, 3 இடங்களிலும் தொழிற்பேட்டைகள் அமைப்பது என்ற அடிப்படையில், குறிப்பாக, பூம்புகாரில் அதற்கான ஆக்கப்பணிகள் துவக்கப்பட்டு சிறப்பாக செயல்படத் துவங்க வேண்டிய நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குத் பின்னால் அதுபற்றி இம்மன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு பூம்புகார் பகுதியில் தொழிற்பேட்டை துவங்குகின்ற அத்தகைய நிலை இல்லை என்று இதே அவையில் அறிவிக்கப்பட்டது, ஆனால், இப்பொழுது மகிழ்ச்சிதரத்தக்க அளவுக்கு பூம்புகாரிலே தொழிற்பேட்டை அமைக்கக்கோரி தொழில் முனைவர்கள் முன்வந்தால், தொழிற்பேட்டை அமைப்பதற்கு அரசு தயாராக இருப்பதாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் கோவை செழியன் பூம்புகாரிலே முகாமிட்டு, எப்படியும் சிறந்த முறையில் தொழிற்பேட்டை உருவாவதற்குரிய முயற்சிகளை எடுப்பதாகத் தெரிவித்ததாக, நான் மிக நம்பகமாக அறிகிறேன், அந்த முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளச் செய்து, பூம்புகாரில் சிறப்பான தொழிற்பேட்டை ஒன்றை அமைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, 1965-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த—சென்னையிலுள்ள சிறு தொழில் பணி நிலையத்தின் இயக்குநர் பூம்புகார் பகுதியில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும், அங்கே எந்த வகையான தொழில்களை நிறுவலாம் என்பது குறித்தும் அரசுக்கு ஒரு தகவலை அனுப்பினார்கள். அந்த அடிப்படையிலேதான் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் சார்பிலே இங்கே உள்ள அதிகாரிகள் அங்கே சென்று என்ன என்ன வகையான தொழில்களை, மூல ஆதாரங்களைக் கொண்ட தொழில்களை (Resource based industry) அமைக்கலாமா அல்லது சிறிய அளவிலே தொழிற்பேட்டை அமைக்கலாமா என்பதை நாம் பரிசீலித்து வருகிறோம். ஆனால், தொழில் முனைவோர்கள் தொழில் செய்ய முன்வரவேண்டும். காரணம், அங்கே அரசாங்கமே தொழிற்சாலையை நிறுவும் குறிப்பு பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் முனைவோர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்ற தகவலைக் கேட்டிருக்கிறோம். ஒவ்வொரு வட்டாரத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர், தொழில் மைய அலுவலர் எந்த எந்தப் பகுதிகளில் என்ன என்ன தொழில்களை உருவாக்கலாம் என்ற அறிக்கைகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே சிறுதொழில் கூடங்களைக் கட்ட வாய்ப்பிருக்கிறதா என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.